
**DWARAKA DOSS GOVERDHAN DOSS VAISHNAV COLLEGE** (Autonomous)

Arumbakkam, Chennai - 600 106.

## Department of Tamil


**Club Name : Tamil Manram (தமிழ் மன்றம்)**




தமிழ் மன்றம் சார்பில் 23.01.2023 ஆம் நாளன்று பேச்சுப் போட்டி நடத்தப் பெற்றது. இப்போட்டியில் வணிகவியல்துறைத் தலைவர் (சுழற்சி 2) நடுவராகப் பங்கேற்றார். இதில் 45 மாணவ மாணவியர் போட்டியில் கலந்து கொண்டனர்.




தமிழ் மன்றம் சார்பில் 23.01.2023 ஆம் நாளன்று கட்டுரைப் போட்டி நடத்தப் பெற்றது. இப்போட்டியில் 46 மாணவ மாணவியர் கலந்து கொண்டனர்.




தமிழ் மன்றம் சார்பில் 27.01.2023 ஆம் நாளன்று நடைபெற்ற முத்தமிழ் விழாவில் “இன்றைய தலைமுறைக்கு வழிகாட்டவல்லது பழைய மரபுகளே! புதிய சிந்தனைகளே!” என்ற தலைப்பில் நடத்தப் பெற்ற பட்டிமன்றத்தில் பர்வீன் சுல்தானா அவர்கள் நடுவராகக் கலந்து கொண்டார்.



தமிழ் மன்றம் சார்பில் 27.01.2023 ஆம் நாளன்று நடைபெற்ற முத்தமிழ் விழாவில் கிருஷ்ணன் தூது என்னும் தெருக்கூத்து நடத்தப்பெற்றது.

## தமிழ் மன்றம் உறுப்பினர்கள் விவரம்



சு. ஆ. நரேஷ்

இரண்டாம் ஆண்டு

கணிதவியல் துறை



செ. சந்தோஷ்

முதலாம் ஆண்டு

பொருளியல் துறை

## ஆண்டறிக்கை 2022 - 2023

## (Annual Report)

தமிழ்த்துறை சார்பில் 17.08.2022 ஆம் நாளன்று இலக்கிய இன்பம் எனும் இலக்கிய நிகழ்ச்சியின் முதல் அமர்வு நடத்தப்பட்டது. விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் சேது. சந்தோஷ்பாபு அவர்கள் தலைமை உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் கு. நிகிதா (இரண்டாம் ஆண்டு, பொருளியல் துறை) அவர்கள் "எண்ணங்களின் பாதை" என்ற தலைப்பிலும் த.சங்கீதா (இரண்டாம் ஆண்டு, கணிதவியல்துறை) அவர்கள் "தமிழ் வளர வழிகள்" என்ற தலைப்பிலும் ஆ. சக்திரேகா (இரண்டாம் ஆண்டு, வேதியியல்துறை) அவர்கள் "கைத்தறி நெசவாளர்கள்" என்ற தலைப்பிலும் வெ. பவனிதா (இரண்டாம் ஆண்டு, பொருளியல் துறை) அவர்கள் "கர்மவீரர் காமராசர்" என்ற தலைப்பிலும் அ. சுஜித்ராஜ் (இரண்டாம் ஆண்டு, வேதியியல்துறை) அவர்கள் "சுதந்திரப் போராட்டத்தில் சுப்பிரமணிய பாரதியின் பங்கு" என்ற தலைப்பிலும் ஜெ. பிரியங்கா மேத்தா (இரண்டாம் ஆண்டு, வேதியியல்துறை) அவர்கள் "கல்விக்கண் திறந்தவர்" என்ற தலைப்பிலும் பெ. பவித்ரா (இரண்டாம் ஆண்டு, கணிதவியல்துறை) அவர்கள் "தாய்மொழிவழிக் கல்வி" என்ற தலைப்பிலும் இரா.சந்தோஷ் (இரண்டாம் ஆண்டு, வேதியியல்துறை) அவர்கள் "திருக்குறள் உரையும் உண்மையும் நூலின் மீதான எனது கருத்துகள்" என்ற தலைப்பிலும் எல்.திரிஷா (இரண்டாம் ஆண்டு, தாவரவியல் துறை) அவர்கள் "நானும் தமிழும்" என்ற தலைப்பிலும் உரையற்றினர். நிகழ்ச்சியில் தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் சி.சதானந்தன் அவர்கள் இந்நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.

தமிழ்த்துறை சார்பில் 13.09.2022 ஆம் நாளன்று ஆசிரியர் - கவிதை நூல் வெளியீட்டு விழாவும் இலக்கிய இன்பம் என்னும் இலக்கிய நிகழ்ச்சியின் இரண்டாம் அமர்வும் நடத்தப்பட்டது. ஆசிரியர் - கவிதை நூலைக் கல்லூரி முதல்வர் முனைவர் சேது. சந்தோஷ்பாபு அவர்கள் வெளியிட்டார். நூலின் முதற்பிரதியைத் தினமணி - தமிழ்மணி துணை ஆசிரியர் இடைமருதூர் முனைவர் கி. மஞ்சுளா அவர்கள் பெற்றுச் சிறப்புரையாற்றினார். விழாவில் ஆ. இந்து, (முதலாம் ஆண்டு, வேதியியல்துறை) சிக்கனமும் சிறுசேமிப்பும் என்ற தலைப்பிலும் ஜே. ஜனனி, (முதலாம் ஆண்டு, கணிதவியல்துறை) தேசிய வீரர் சுபாஷ் சந்திர போஸ் என்ற தலைப்பிலும் வே.

முனீஷ்குமார், (இரண்டாம் ஆண்டு, இயற்பியல்துறை) வாலியின் கவித்திறன் என்ற தலைப்பிலும் அ. அபி, (இரண்டாம் ஆண்டு, கணிதவியல்துறை) அப்துல்கலாம் எனும் மாமேதை என்ற தலைப்பிலும் அ. ஆதித்யா, (முதலாம் ஆண்டு, வேதியியல்துறை) விளைநிலங்கள் விலை நிலங்களாவது ஏன்? என்ற தலைப்பிலும் என். சூரியராஜ், (இரண்டாம் ஆண்டு, நிறுமச்செயலாண்மையியல் துறை) கங்கை மைந்தன் குகன் என்ற தலைப்பிலும் கு. கயல்விழி, (முதலாம் ஆண்டு, கணிதவியல்துறை) சாதிகள் இல்லையடி பாப்பா! என்ற தலைப்பிலும் ப. தீபிகா, (இரண்டாம் ஆண்டு, வேதியியல்துறை) இயற்கைப் பாதுகாப்பில் மனிதன் என்ற தலைப்பிலும் அ. ஹேமாவதி, (இரண்டாம் ஆண்டு, கணிதவியல்துறை) பாரதியார் காட்டும் பெண்கள் என்ற தலைப்பிலும் சு. ஹரிஷ், (முதலாம் ஆண்டு, வேதியியல்துறை) எனக்குப் பிடித்த சிலம்பு என்ற தலைப்பிலும் எச். தஸ்லிமா நஸ்ரின், (இரண்டாம் ஆண்டு, நிறுமச்செயலாண்மையியல் துறை) சிலப்பதிகாரத்தில் பெண் என்ற தலைப்பிலும் த. சத்தியப் பிரியா, (முதலாம் ஆண்டு, கணிதவியல்துறை) அக்னிச் சிறகுகள் என்ற தலைப்பிலும் உரையாற்றினர். இந்நிகழ்ச்சியை முனைவர் கு. சுதாகர் அவர்கள் ஒருங்கிணைத்தார்.

தமிழ்த்துறை சார்பில் 19.10.2022 ஆம் நாளன்று தமிழ்த்துறையின் ‘செங்குரலி’ செய்திமடல் வெளியீட்டு விழாவும் இலக்கிய இன்பம் எனும் இலக்கிய நிகழ்ச்சியின் மூன்றாம் அமர்வும் நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் ‘செங்குரலி’ செய்திமடலைக் கல்லூரி முதல்வர் முனைவர் சேது. சந்தோஷ்பாபு அவர்கள் வெளியிட்டார். இப்பிரதியை மயிலாப்பூர், இராமகிருஷ்ணா மிஷன் விவேகானந்தா கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் மா. பெரியசாமி அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பெற்றுச் சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் ஆ. இந்து (வேதியியல்துறை) செயற்கரிய செய்வர் பெரியர் என்ற தலைப்பிலும் சே. பிரவீன்குமார் (கணிதவியல்துறை) தமிழ்த் திரைப்படங்களில் இலக்கியம் என்ற தலைப்பிலும் வெ. நீனா (வேதியியல்துறை) கண் இடந்து அப்பியவன் என்ற தலைப்பிலும் கே. விஷ்ணு, (நிறுமச் செயலாண்மையியல் துறை) ஒளிபடைத்த கண்ணினாய்! என்ற தலைப்பிலும் இரா.ரோகினி, (கணிதவியல்துறை) அன்றும் இன்றும் சமுதாயத்தில் பெண்கள் என்ற தலைப்பிலும் ந.சரண்யா, (நிறுமச்

செயலாண்மையியல் துறை) ஏவுகணை நாயகன் என்ற தலைப்பிலும் கு. கயல்விழி, (கணிதவியல்துறை) தோல்வியில் கலங்கேல் என்ற தலைப்பிலும் செல்வி பு. ஷர்மி, (வணிகவியல்துறை) கொங்கச் செல்வி கண்ணகி என்ற தலைப்பிலும் த. சத்தியப்பிரியா, (கணிதவியல்துறை) எனக்குப் பிடித்த திருக்குறள் என்ற தலைப்பிலும் மு.நா. பவித்ரா, (கணிதவியல்துறை) எண்ணங்களை மதித்தல் என்ற தலைப்பிலும் ப. கலாபாரதி, (இயற்பியல்துறை) தாழாத மாண்பு - தஞ்சைப் பெரிய கோயில் என்ற தலைப்பிலும் மிகச் சிறப்பாக உரையாற்றினர். இவ்விழாவை முனைவர் க. கிரிவாசன் அவர்கள் ஒருங்கிணைத்தார்.

தமிழ்த்துறை சார்பில் 09.11.2022 ஆம் நாளன்று 'பன்னாட்டு வைணவ மாநாடு' நடத்தப் பெற்றது. இம்மாநாட்டில் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் ப.முருகன் அவர்கள் வரவேற்புரையாற்றினார். திருக்கோவலூர் ஶ்ரீமத் எம்பெருமானார் ஜீயர் 26ஆம் பட்டம் மடாதிபதி ந்யாய வேதாந்த வித்வான், தர்கரத்னம் ஶ்ரீ உ.வே. தேஹளீச ராமாநுஜாசாரியர் ஜீயர் ஸ்வாமிகள், 'மங்களாசாசனம்' செய்தருளினார். தமிழ்நாடு அரசு, திருக்கோயில் திருப்பணி திட்டவரைவுக்குழு உறுப்பினர், உயர்திரு மதுசூதனன் கலைச்செல்வன் அவர்கள் 'அரையர் சேவை' எனும் பொருண்மையிலும், சென்னைப் பல்கலைக்கழக வைணவத்துறைத் தலைவர் பேராசிரியர் முனைவர் கோழியாலம் தயாநிதி அவர்கள் 'பழுதே பலபகலும்' எனும் பொருண்மையிலும், ஜெர்மனி, ஹம்பர்க் பல்கலைக்கழகப் பேராசிரியர் முனைவர் சுகன்யா அனந்த கிருஷ்ணன் அவர்கள், 'வைணவ இலக்கியச் சுவடிகள்' எனும் பொருண்மையிலும், சென்னை, பச்சையப்பன் கல்லூரியின் மேனாள் முதல்வரும் தமிழ்த்துறைத் தலைவருமான பேராசிரியர் முனைவர் தெ. ஞானசுந்தரம் அவர்கள் 'ஆழ்வார்கள் அருளிச் செயல்' எனும் பொருண்மையிலும், சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்மொழித்துறையின் மேனாள் தலைவர் பேராசிரியர் முனைவர் அரங்க இராமலிங்கம் அவர்கள், 'வைணவம் காட்டும் வாழ்வியல்' எனும் பொருண்மையிலும், முனைவர் ஶ்ரீ உ.வே. அனந்தபத்ம நாபாசாரியர் ஸ்வாமிகள் அவர்கள் 'வையம் போற்றும் வைணவம்' எனும் பொருண்மையிலும் உரையாற்றினர். இம்மாநாட்டை முனைவர் கு.சுதாகர், முனைவர் சி.சதானந்தன், முனைவர் க. கிரிவாசன் ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.

தமிழ்த்துறை சார்பில் 22.12.2022 ஆம் நாளன்று மகாகவி பாரதியாரின் 140 ஆம் ஆண்டு பிறந்தநாள் பெருமங்கலவிழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. பாரதியின் எள்ளுப்பேரன் நிரஞ்சன் பாரதி அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினார். இவ்விழாவை முனைவர் கு.சுதாகர், முனைவர் க. கிரிவாசன் ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.

தமிழ்த்துறையும் என்.டி.எல்.ஐ மன்றமும் இணைந்து 04.01.2023 ஆம் நாளன்று “கவியுலா என்னும் கவிதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா” நடத்தப் பெற்றது. விழாவில் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் ப. முருகன் அவர்கள் நோக்க உரையாற்றினார். விழாவில் சிறப்பு விருந்தினராக பால சாகித்திய அகாதெமி விருதாளர் கவிஞர் மு. முருகேஷ் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இவ்விழாவில் கவியுலா நூல் குறித்து முனைவர் சி.சதானந்தன் அவர்கள் திறனாய்வுரை வழங்கினார். நூலகர் முனைவர் ம.மணி அவர்கள் நன்றி கூறினார். தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் கு. சுதாகர் அவர்கள் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். முனைவர் சி.சதானந்தன் அவர்கள் ஒருங்கிணைத்தார்.

தமிழ்த்துறை சார்பில் 11.01.2023 ஆம் நாளன்று திருப்பாவை விழாவும் இலக்கிய இன்பம் எனும் இலக்கிய நிகழ்ச்சியின் மூன்றாம் அமர்வும் நடத்தப்பட்டது. இலக்கிய இன்பம் எனும் இலக்கிய நிகழ்ச்சியின் நான்காம் அமர்வும் நடத்தப்பட்டது. தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் ப.முருகன் அவர்கள் வரவேற்றுப் பேசினார். இவ்விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட முனைவர் டி.எஸ்.பிரேமா அவர்களும் சென்னைப் பல்கலைக்கழக வைணவத்துறைத் தலைவர் முனைவர் கோழியாலம் தயாநிதி அவர்களும் உரையாற்றினார். விழாவில் மாணவர்கள் ஆண்டாளின் வாழ்க்கை வரலாற்றை நாடகமாக நடித்தனர். தமிழ் இலக்கியத்துறைத் தலைவர் முனைவர் க.ர.லதா அவர்கள் நன்றி கூறினார். தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் முனைவர் த.கெஜலட்சுமி, முனைவர் சி.சதானந்தன் ஆகியோர் விழாவை ஒருங்கிணைத்தனர்.

தமிழ்த்துறை (சுழற்சி 1 மற்றும் சுழற்சி 2) தமிழ்மன்றம் சார்பில் முத்தமிழ் விழாவை முன்னிட்டு 20.01.2023 ஆம் நாளன்று 23.01.2023 ஆம் நாளன்று கவிதைப் போட்டியும் கட்டுரைப்போட்டியும் 24.01.2023 ஆம் நாளன்று பேச்சுப் போட்டியும்

நடத்தப்பட்டன. டாக்டர் பி.எஸ்.எஸ். அறக்கட்டளை சார்பில் 23.01.2023 ஆம் நாளன்று பேச்சுப் போட்டியும் கட்டுரைப் போட்டியும் நடத்தப்பட்டன. முத்தமிழ் விழா 27.01.2023 ஆம் நாளன்று மிகச் சிறப்பாக நடத்தப்பட்டது.

தமிழ்த்துறை (சுழற்சி 1 மற்றும் சுழற்சி 2) மற்றும் தமிழ் இலக்கியத்துறை இணைந்து முத்தமிழ் விழாவை 27.01.2023 ஆம் நாளன்று சிறப்பாக நடத்தின. இவ்விழாவில் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் ப. முருகன் அவர்கள் வரவேற்புரையாற்றினார். கல்லூரி முதல்வர் சேது. சந்தோஷ்பாபு தலைமையுரையாற்றினார். “இன்றைய தலைமுறைக்கு வழிகாட்டவல்லது பழைய மரபுகளே! புதிய சிந்தனைகளே”! என்ற தலைப்பில் சிறப்புப் பட்டிமன்றம் நடத்தப்பட்டது. இப்பட்டிமன்றத்தில் ஜஸ்டீஸ் பஷீர் அகமது சயீது மகளிர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் முனைவர் பர்வீன் சுல்தானா அவர்கள் நடுவராகக் கலந்து கொண்டார். ‘பழைய மரபுகளே’! என்கிற அணியில் மா.மதன்குமார், கோ.பொன்ரோஜா, க.மணிமொழி ஆகியோர் உரையாற்றினர். ‘புதிய சிந்தனைகளே’! என்கிற அணியில் கு. கயல்விழி, ம. ஈஸ்வரன், கி. ஈ. கிப்ட்லின் ஷெறில் ஆகியோர் உரையாற்றினர். இந்தியப் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்திலிருந்து (DRDO) விஞ்ஞானி வி. டில்லிபாபு அவர்கள் ‘தமிழரும் அறிவியலும்’ என்னும் தலைப்பில் உரையாற்றினார். ஜி.ஆர்.டி. கல்விக் குழுமம் இசைப் பேராசிரியர் முனைவர் ந. பன்னீர் செல்வம் அவர்கள் இசை நிகழ்ச்சி நடத்தினார். காஞ்சிபுரம், ஸ்ரீ பச்சையம்மன் தெருக்கூத்து மன்றத்தார் ‘கிருஷ்ணன் தூது’ என்னும் தலைப்பில் தெருக்கூத்து நடத்தினர். இவ்விழாவில் பல்துறை சார்ந்த மாணவர்கள் பாடல், நடனம், கரகாட்டம், இசை போன்ற பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்றனர். இவ்விழாவை முனைவர் சி.சதானந்தன், முனைவர் க.ர.லதா ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.

**Club Regular Activities**

- தமிழ்த்துறையின் தமிழ் மன்றம் சார்பில் மாணவர்களின் பேச்சுத் திறமையை வளர்க்கும் வகையில் ஆண்டுதோறும் பேச்சுப் போட்டி நடத்தப்படுகிறது.
- மாணவர்களின் எழுத்தாற்றலை வளர்க்கும் வகையில் கட்டுரைப் போட்டி நடத்தப்படுகிறது.
- மாணவர்களின் படைப்பாற்றலை வளர்க்கும் வகையில் கவிதைப் போட்டி நடத்தப்படுகிறது.
- மாணவர்களின் பன்முகத்திறனை வளர்க்கும் வகையிலும் வெளிப்படுத்தும் வகையிலும் ஆண்டுதோறும் முத்தமிழ் விழா நடத்தப்படுகிறது.

## தமிழ்த்துறையின் விவரங்கள்

பெயர் : தமிழ்த்துறை

முனைவர் ப. முருகன்

தமிழ்த்துறைத் தலைவர்



முனைவர் சு. சுஜா

உதவிப் பேராசிரியர்



## Gallery

### நிழற்படங்கள்




தமிழ்த்துறையின் 'செங்குரலி' என்னும் செய்திமடல் 05.07.2023 ஆம் நாளன்று வெளியிடப்பட்டது. இதில் சிறப்பு விருந்தினராக அண்ணா ஆதர்ஷ் மகளிர் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் (சுழற்சி 2) முனைவர் த. குறிஞ்சி அவர்கள் கலந்து கொண்டார்.




தமிழ்த்துறை சார்பில் 13.09.2023 ஆம் நாளன்று நடத்தப் பெற்ற இலக்கிய இன்பம் என்னும் இலக்கிய நிகழ்ச்சியின் மூன்றாம் அமர்வில் உரையாற்றிய மாணவர்களுக்கு நினைவுப் பரிசாகப் புத்தகங்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.




தமிழ்த்துறை சார்பில் 11.10.2023 மற்றும் 12.10.2023 ஆகிய இரண்டு நாட்கள் “இராமாயணம் மகாபாரதம் காட்டும் வாழ்வியல்” என்னும் பொருண்மையில் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்தப்பட்டது. இதில் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்ட மலேசியா நாட்டைச் சேர்ந்த மருத்துவர் டத்தோ வ. கதிரேசன், பேராசிரியர் அரங்க. இராமலிங்கம், சிங்கப்பூர் சமயச் சொற்பொழிவாளர் அ.கி.வரதராசன், இலங்கைப் பேராதனைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் கலாநிதி ஸ்ரீ பிரசாந்தன் உடன் கல்லூரி முதல்வர் முனைவர் சேது. சந்தோஷ்பாபு, தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் ப.முருகன், தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் சு. சுஜா, கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்கள் முனைவர் சி. சதானந்தன், முனைவர் க. கிரிவாசன்.




தமிழ்த்துறை சார்பில் 11.10.2023 மற்றும் 12.10.2023 ஆகிய இரண்டு நாட்கள் “இராமாயணம் மகாபாரதம் காட்டும் வாழ்வியல்” என்னும் பொருண்மையில் நடத்தப்பட்ட பன்னாட்டுக் கருத்தரங்கில் “நவீன காலத்திற்கும் மகாபாரதம்” என்னும் தலைப்பில் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் டாக்டர் சுதா சேஷய்யன் அவர்கள் சிறப்புரையாற்றினார்.




தமிழ்த்துறை சார்பில் 22.12.2023ஆம் நாளன்று 140ஆம் ஆண்டு மகாகவி பாரதியார் பிறந்தநாள் பெருமங்கல விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக மகாகவி பாரதியாரின் எள்ளுப் பெயரன் திரைப்படப் பாடலாசிரியர் நிரஞ்சன் பாரதி அவர்கள் கலந்து கொண்டு “மனதில் உறுதி வேண்டும்” என்னும் தலைப்பில் உரையாற்றினார். அவ்விழாவில் உரையாற்றிய மாணவர்களுக்கு நினைவுப் பரிசாகப் புத்தகங்கள் வழங்கப்பட்டன.